பக்கங்கள் 21

# மாலை முரசு

## டயானாவின் தலைவிதி 31ஆம் திகதி நிர்ணயம்



இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் நாடாளு மன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்வதற்கான உத்தரவை 05

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 01 புதன்கிழமை 18.10.2023 அதிர்வு 79



எத்தனை பிரதமர் ரணில்? எத்தனை ஜனாதிபதி ரணில்? எத்தனை வாக்குறுதி?

# மலைநாடும் மயிலத்தமடுவும் உங்கள் பட்டியலில் கடைசியா?

### கடும் சீற்றத்துடன் மனோ கேள்வி

"கொழும்பாக இருந்தாலும், மலைநாடாக இருந்தாலும், வடக்காக இருந்தாலும், கிழக்காக இருந்தாலும், எங்களுக்கு இனியும் இருட்டறையில் நின்று வழிதேடி தடுமாற முடியாது. ஆகவே, எத்தனை பிரதமர் ரணில்? எத்தனை ஜனாதிபதி ரணில்? எத்தனை வாக்குறுதி? மலைநாடும், மயிலத்தமடுவும் உங்கள் பட்டியலில் கடைசியா?"

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

கொழும்பில் நடைபெற்ற 04

## ஹர்த்தாலுக்கு ஆதரவு தரவும்

### எட்டு தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை

- எஸ்.நிதர்ஷன் -

பொது முடக்கத்துக்குத் தமிழ் பேசும் மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் நாம் உரிமையுடன் வேண்டுகின்றோம் என 8 தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கோரியுள்ளன. 05

காசா வைத்தியசாலை மீதான தாக்குதல்

## வெறுக்கத்தக்க போர்க்குற்றமே!

### சுமந்திரன் எம்.பி. கண்டனம்



காசா நகரில் உள்ள அல் - அக்லி வைத்தியசாலை மீது இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுகளை வீசிய நடத்திய தாக்குதலில் குழந்தைகள் 05

ஒரு கோடி ரூபா அபேஸ்:

## மூன்று சந்தேகநபர்கள் பணத்துடன் சிக்கினர்!



- ரஸீன் ரஸ்மின் -

புத்தளம், மதுரங்குளி, 10ஆம்கட்டையிலுள்ளதனியார் வங்கியொன்றுக்கு சொந்தமான ஏ.ரி.எம். இயந்திரத்தில் 04

## ரயிலில் மோதுண்டு குடும்பஸ்தர் மரணம்





- திருகோணமலை நிருபர்கள் -

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பகுதியில் 04



# எதிர்வரும் இரண்டு வருட காலத்துக்கு 10 வீதத்தால் உயரவுள்ள மின் கட்டணம்

இலங்கையில் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு மின்சாரக் கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிக்க வேண்டிய தேவை இருப்பதாக இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் எதிர்பார்க்கப்படும் வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையிலான இடைவெளியை நிர்வகிப்பதற்கு இந்தக் கட்டணங்களை அதிகரிக்க வேண்டியது அவசியமானது என்று மின்சார சபை சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, மின்சாரக் கட்டணத்தை 22 வீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை சமர்ப்பித்த தரவுகளில் முரண்பாடுகள் காணப்படுவதன் காரணமாக, மின் கட்டணத்தை மீளக் கணக்கிடுமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அண்மையில் இலங்கை மின்சார சபைக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தது.

இதன்படி, இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் பதில் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இதற்கமைய, கடந்த செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் உள்நாட்டு தனியார் மின் உற்பத்தியாளர்கள் அரச வங்கி ஒன்றில் இருந்து 32 வீத வட்டி அடிப்படையில் பெறப்பட்ட மேலதிக கடனாக 156,051 மில்லியன் ரூபாவைச் செலுத்த வேண்டியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி வரை, வெளி தரப்பினருக்கு செலுத்த வேண்டிய கடன் மற்றும் அசல் கொடுப்பனவுகளின் தொகை 421,818 மில்லியன் ரூபாவாகும் என்று மின்சார சபையால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023 ஒக்ரோபர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் இலங்கை மின்சார சபையின் எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் 603,736 மில்லியன் ரூபாவாக இருக்கின்ற போதும், குறித்த காலப் பகுதியில் எதிர்பார்க்கப்படும் செலவினம் 622,478 மில்லியன் ரூபாவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, மதிப்பிடப்பட்ட மேலதிக பற்றாக்குறை 18,742 மில்லியன் ரூபா என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நாட்டில் டொலர் வருகை குறைவடைந்தால் இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டிவரும்

## கொழும்பு பல்கலைக்கழகப் பொருளியல்துறை பேராசிரியர் கணேசமூர்த்தி தெரிவிப்பு

இப்போது இருக்கின்ற இந்த சூழ்நிலையில் நாட்டுக்குள் போதிய அளவு டொலர் வருகை தடைப்பட்டால் இறக்குமதிகளை ஏதோ ஒரு வகையிலே கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

இவ்வாறு கொழும்பு பல்கலைக் கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி எம்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்–

எதிர்காலத்தில் இலங்கை ரூபாவுக்கு எதிராகப் பல வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதி அதிகரிக்கக் கூடிய சாத்தியங்கள் உண்டு. எனினும், மத்திய வங்கி அவ்வாறு அதிகரிப்பதை தடுக்கக் கூடிய சாத்தியங்களும் உண்டு.

ஆரம்பத்தில் பிரச்சினைகள் அதிகரித்திருந்த காலப் பகுதியில், இலங்கை மத்திய வங்கி ரூபாவின் பெறுமதியை நிலையான மட்டத்திலே பேணி வந்தது.



பின்னர் திடீரென்று ஒரே தடவையிலே அதனை நீக்கிக் கொண்டதால் இலங்கை ரூபாவின் பெறுமதி, டொலர் உள்ளிட்ட ஏனைய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராகத் திடீரென்று குறைவடையத் தொடங்கியது.

இந்தமுறை அந்தத் தவறை விட மாட்டார்கள். மாறாக இவ்வாறு டொலர் சந்தையில் குறைவாக வந்து கொண்டிருக்கும் காலப் பகுதியில் இலங்கை ரூபாவை தேய்வடைய அனுமதிப்பார்கள்.

அவ்வாறு அனுமதிப்பதன் மூலமாக இலங்கை ரூபாவின் பெறுமதி சிறிது சிறிதாகக் குறைவடையக் கூடிய வாய்ப்புகள் உண்டு. ஆரம்பத்தில் நடந்தது போன்று ஒரே இரவிலே அது மிகப் பெரிய அளவிலே தேய்வடையக் கூடிய வாய்ப்புகள் இல்லை.

ஆனால் இப்போது இருக்கும் சூழ்நிலையைப் பார்க்கும் போது நாட்டுக்குள் போதிய அளவு டொலர் வருகை ஏற்படாவிட்டால் இறக்குமதிகளை ஏதோ ஒரு வகையிலே கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

அதேபோல, இந்த எரிபொருள் கோட்டா போன்றவற்றை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டிய சூழல் ஏற்படலாம்.–என்றார்.



# இஸ்ரேல் - ஹமாஸ் தாக்குதலில் 15 ஊடகவியலாளர்கள் கொலை!

உக்ரமடைந்து வரும் இஸ்ரேல் – ஹமாஸ் தாக்குதலில் இதுவரையில் 15 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட் டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக கின்றன.

இவ்வாறு கொல்லப்பட்ட ஊடகவிய லாளர்களில் அரைவாசிப்பேர் பேர் புகைப்பட பத்திரிகையாளர்களாகப் பணிபுரிந்தவர்கள். தாக்குதலை ஆவ ணப்படுத்த முயன்ற போது கொல் லப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக் கப்படுகின்றது.

உயிரிழந்த ஊடகவியலாளர்களில் 11 பேர் பாலஸ்தீனர்கள். ஒரு லெபனான் ஊடகவியலாளரும், மூன்று இஸ்ரேல் ஊடகவியலாளர்களும் அடங்குவர்.

மேலும் 8 ஊடகவியலாளர்கள் காய மடைந்துள்ளனர். 3 பேரைக் காண வில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்ராஹிம் முகமது லாஃபி, முகமது ஜார்கூன், முகமது அல்–சால்ஹி, யானிவ் சோஹர், அய்லெட் அர்னின், ஷாய் ரெகேவ், அசாத் ஷாம்லாக், ஹிஷ ாம் அல்ன்வாஜா ,முகமது சோப் ,சயீத் அல் – தவீல், முகமது பயஸ் அபு மாதர், அகமது ஷெஹாப், இஸ்ஸாம் அப் துல்லா , ஹுஸாம் முபாரக், சலாம் மேமா என்ற 15 ஊடகவியலாளர்களே கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேல் ஹமாஸ் போரில் ஊடக வியலாளர்களும் அதிகளவில் பாதிப் படைகின்றனர். பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள். அவர்களின் பாது காப்பை உறுதிப்படுத்த அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# சுவிஸ் நாடாளுமன்ற தேர்தலில் இலங்கைத் தமிழன் போட்டி!



சுவிஸ் நாடாளுமன்ற தேர்தலில் இலங்கை தமிழரான சந்தியாப்பிள்ளை கபிரியேல் போட்டியிடவுள்ளார்.

இவர் இலங்கை மன்னார் மாவட்டம் பறப்பாங்கண்டல் கிராமத்தைச் சேர்ந்த வர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 22 ஆம் திகதி சுவீஸ் நாட்டில் நடைபெறவிருக்கும் நாடாளு மன்றத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பாகப் இவர் போட்டியிடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் சுவிஸ் நாட்டில் 1989 ஆம் ஆண்டு முதல் 25 வருடங்கள் மனநல வைத்தியசாலையிலும், 8 வருடங்கள் எலும்பு முறிவு வைத்தியசாலையிலும் தாதியாகக் கடமைபுரிந்துள்ளார்.

அரச அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளராக 1990 ஆம் அண்டு முதல் கடமை புரிந்து வருகிறார்.

மேலும், இவர் சுவிஸ் நாட்டில் மன னார் மறை மாவட்டத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 7 கத்தோலிக்க ஆலயங் களில் 2019 ஆம் ஆண்டிலிருந்து திருப்பண்டப் பொறுப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

நகர சபை உறுப்பினராக 2016 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இருந்து வருகின்றார்.

இவர் இத்தேர்தலில் வெற்றிப் பெற் றால் சுவிஸ் நாடாளுமன்றத்தில் முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்று பதிவு செய்யப்படுவார் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மலைநாடும் மயிலத்தமடுவும்...

முற்போக்குக் கூட்டணி அரசியல் குழுக் கூட்டத்தின் பிறகு ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

"இந்நாட்டில் சுதந்திரம் பெற்றோம் என நாம் கொண்டாடும் பெப்ரவரி 4ஆம் திகதி இவ்வருட தினத்துக்கு முன், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு என நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி அளித்தார். 13 ஆவது திருத்தம் அமுல் எனவும் அவர் வாக்குறுதி அளித்தார். அப்புறம் 13 இல் பொலிஸ், காணி மைனஸ் எனவும் வாக்குறுதி அளித்தார். அப்புறம் எம்.பி. விக்னேஸ்வரனைத் துணைக்கு அழைத்துக்கொண்டு வடக்கில் மாகாண நிர்வாகக் குழு அமைப்போம் எனவும் வாக்குறுதி அளித்தார். தொல்பொருள் திணைக்களத்தை அழைத்து காணிகளை விடுவியுங்கள் எனவும் கட்டளை இட்டார். திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி விலகினாரே தவிர ஜனாதிபதியின் கட்டளை நிறைவேறவில்லை.

பிறகு அவரது அரசு தேர்தல்களைப் பிற்போட சர்வஜன வாக்கெடுப்பு என்று பேசுகின்றது. அவர் நேரடியாகச் சொன்னாலும், அவருக்கு நேரடி நெருக்கமாக அவரது அரசில் இருப்போர் சொன்னாலும் எமக்கு ஒன்றுதான். இப்போது ஜனாதிபதி முறைமையை அகற்றப் போகின்றேன் என்கிறார். முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவை துணைக்கு அழைத்துக்கொண்டு நாடாளுமன்றத் தேர்தல் முறைமையை மாற்றி தமிழ் பேசும் பிரதிநிதித்துவங்களுக்கு ஆப்பு வைப்பேன் எனவும் சொல்லாமல் சொல்கின்றார்.

பிரிட்டிஷ்ஸ்கொட்லண்ட்யார்ட்பொலிஸை அழைத்து, உயிர்த்த ஞாயிறு தினக் குண்டு வெடிப்பு விசாரணையைக் கையளிப்போம் என நாடாளுமன்றம் வந்து வாக்குறுதி அளித்தார். இப்போது ஜேர்மனிக்குப் போய் சர்வதேச விசாரணை கிடையவே கிடையாது என்கின்றார். உள்ளூரில் மீண்டும் நாடாளுமன்றக் குழு அமைப்பதாகச் சொல்கின்றார்.

பெருந்தோட்டத் துறையில் காணிப் பிரச்சினைக்கு இதோ தீர்வு, அதோ தீர்வு என்று இவரது அரசாங்க அமைச்சர்கள் இரண்டு பேர், ஒருவர் பெருந்தோட்டம், அடுத்தவர் தோட்ட உட்கட்டமைப்பு, சொன்னார்கள். ஆனால், ஒன்றையும் காணோம். இந்த அமைச்சர்கள் இந்தப் பதவிகளுக்கு வர முன்னமேயே ஒரு சம்பவம் இலங்கை நாடாளுமன்றத்தில் நடந்தது. இதை இவர்கள் படித்து அறிய வேண்டும்.

இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதே நாடாளுமன்றத்தில், பிரதமராகச் சில காலம் இருந்த போது, நாடாளுமன்றத்தில் நான் எழுப்பிய கோரிக்கையை ஏற்று, உடனடியாகப் பெருந்தோட்டங்களில் உள்ள பயிரிடப்படாத தரிசு நிலங்களைப் பிரித்து பெருந்தோட்ட குடும்பங்களுக்கு வழங்குகின்றேன் என வாக்குறுதி அளித்தார். அதற்கு "மனோ கணேசன் திட்டம்" எனப் பெயரும் வைக்கின்றேன் எனவும் பகிரங்கமாக நாடாளுமன்றத்தில் வாக்குறுதி வழங்கினார். "ஐயா சாமி, எனது பெயர் வேண்டாம், எனது மக்களுக்கு காணி கொடுங்கள். அது போதும்" என்று அப்போதே நான் திருப்பி அவருக்குச் சொன்னேன். இன்று எங்கே அந்தப் பெருந்தோட்டங்களில் உள்ள பயிரிடப்படாத தரிசு நில காணிகள், மிஸ்டர் பிரசிடென்ட்?

கடைசியாக இப்போது மயிலத்தமடு கால்நடைமேய்ச்சல்தரைவிவகாரம்தொடர்பில், அதிகாரிகளை அழைத்து பணிப்புரை விடுத்தார். இன்று, அங்கே புத்தர் சிலையைக் கொண்டு வந்து நிறுத்தி உள்ளார்கள். அங்குள்ள அந்த அம்பிட்டிய பிக்கு வாயைத் திறந்தால் தெருச் சண்டியன் மாதிரி தூஷணம் பேசுகின்றார். மேய்ச்சல் தரையில் பாரம்பரியமாகக் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வந்த மக்களுக்கு நிலம் கையளிக்கப்படுவது ஒருபுறம் இருக்க, இப்போது கௌதமரையும் அங்கே இவர்கள் கொண்டு வந்து நிறுத்தி இருப்பது, மயிலத்தமடு, "மாடு" களுக்கே அடுக்காது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனத்தில் இருந்து நாடு திரும்பிய உடன் அவரை நான் சந்திக்க விரும்புகின்றேன். சந்தித்து இந்தக் கேள்விகளை எல்லாம் அவரிடம் தனிப்பட்ட முறையில் நேரடியாக நானே எழுப்பவுள்ளேன். எடுத்த எடுப்பிலேயே நாடாளுமன்றத்தில் அனைவர் முன்னிலையிலும் இவற்றை எழுப்பி, தனிப்பட்ட முறையில் அவரை நன்கு அறிந்த நான் நாட்டின் ஜனாதிபதியை தர்ம சங்கடத்துக்கு உள்ளாக்க விரும்பவில்லை. வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமை தொடர்பில், வெளியே சொல்ல முடியாத காரணங்கள் இருந்தாலும் அவர் என்னிடம் சொல்வார் என நம்புகின்றேன். அவற்றை அப்படியே வெளியே வந்து சொல்ல அவர் விரும்பாவிட்டால் நான் வெளியிடவும் மாட்டேன்.

ஆனால், இவை பற்றிய தெளிவை நான் தேடுகின்றேன். கொழும்பாக இருந்தாலும், மலைநாடாக இருந்தாலும், வடக்காக இருந்தாலும், கிழக்காக இருந்தாலும், எங்களுக்கு இனியும் இருட்டறையில் நின்று வழி தேடி தடுமாற முடியாது. ஆகவே, எத்தனை பிரதமர் ரணில்? எத்தனை ஜனாதிபதி ரணில்? எத்தனை வாக்குறுதி? மலைநாடும், மயிலத்தமடுவும் உங்கள் பட்டியலில் கடைசியா?" - என்றார்.

## மூன்று சந்தேகநபர்கள்...

ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தைச் சூறையாடிச் சென்ற மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி திருட்டுச் சம்பவம் இடம்பெற்று 10 நாட்களுக்குள் மதுரங்குளி பொலிஸாருடன் இணைந்து புத்தளம் பிரிவுக்குப் பொறுப்பான குற்ற விசாரணை பிரிவினர் சந்தேகநபர்களை நேற்று கைது செய்துள்ளனர்.

இந்த மூன்று சந்தேகநபர்களுடன் சூறையாடப்பட்ட பணத்தில் மீதமுள்ள 92 இலட்சத்து 77 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும், சந்தேகநபர்கள் கைது செய்யப்படும்போது, சூறையாடிய பணத்தில் குறித்த மூவரும் பல்வேறு நடவடிக்கைகளுக்காக 12 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தைச் செலவிட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

கடந்த 7ஆம் திகதி இரவு, தனியார் வங்கி ஒன்றுக்குச் சொந்தமான தானியங்கி பணப்பரிவர்த்தனை இயந்திரத்தின் பராமரிப்பு பணியாளர்கள் போல நடித்து, யாருக்கும் சந்தேகம் வராத வகையில், மிகவும் தந்திரமாக திறப்பு ஒன்றால் குறித்த ஏ.ரி.எம். இயந்திரத்தின் பிரதான கதவைத் திறந்து, உரிய இரகசிய எண்களைப் பயன்படுத்தி, சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான பணத்தைத் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து, மதுரங்குளி பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை புத்தளம் பிரிவுக்குப் பொறுப்பான குற்ற விசாரணை பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்படி, திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற 10 நாட்களுக்குள் மேற்படி கொள்ளைச் சம்பவத்துக்குத் தலைமை தாங்கிய இரண்டு பிரதான சந்தேகநபர்களும், அவர்களுக்கு உதவியாக இருந்த சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தத் தனியார் வங்கியின் பாதுகாப்பு மற்றும் பண பரிவர்த்தனைக்குப் பொறுப்பான தனியார் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் அனுராதபுரம் மற்றும் கல்கமுவ பகுதிகளைச் சேர்ந்த இருவரும், அநுராதபுரத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் கடுகஸ்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த மற்றுமொரு நபருமே இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு புத்தளம் குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், மேலதிக விசாரணைகளுக்காக மதுரங்குளி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களும் மேலதிக விசாரணைகளுக்காக மதுரங்குளி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

புத்தளம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவின் ஆலோசனையின் பேரில், புத்தளம் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஏ.ரூபசிங்க, ஆனமடுவ உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த குமார, புத்தளம் பிரிவு குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ. ஆர்.ஏ. சந்திரசிறி லால் மற்றும் மதுரங்குளிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காமினி விக்கிரமசிங்க உள்ளிட்ட பொலிஸ் குழு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ரயிலில் மோதுண்டு...

இரண்டு பிள்ளைகளின் தந்தை ரயிலில் மோதுண்டு சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார்.

நேற்றிரவு திருகோணமலையில் இருந்து கொழும்புக்குச் செல்லும் ரயிலில் மோதுண்டே அவர் உயிரிழந்துள்ளார்.

இலக்கம் 845/10, முள்ளிப்பொத்தானை எனும் முகவரியைச் சேர்ந்த தாவூது சலீம் என்ற குடும்பஸ்தரே இந்தச் சம்பவத்தில் பலியாகியுள்ளார்.

குடிபோதையில்மூவர்மதுஅருந்திவிட்டு வீடு திரும்பும்போது உயிரிழந்தவர் தண்டவாளத்தில் உறங்கினார் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் தள வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ஹர்த்தாலுக்கு...

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது 8 தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இது தொடர்பில் கூட்டறிக்கையையும் வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“இலங்கைத் தீவு சுதந்திரம் அடைந்து, 75 வருடங்கள் கடந்து விட்ட போதிலும், தமிழ் பேசும் மக்களாகிய நாம், உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், தொடர்ந்து நீதி கோரி நிற்கின்றோம்.

போர் முடிந்து 14 வருடங்கள் உருண்டோடி விட்டன. இருந்தும், இதுவரையில் எமக்கு நீதி வழங்கப்படவில்லை. மாறாக, எமது துன்பங்களும் துயரங்களும் நீடித்து நிற்கின்றன.

எம் மீதான அழுத்தங்களும் நெருக்குதல்களும் தொடர்கின்றன. எமது தாயகமான வடக்கு – கிழக்கு மாகாணங்களில் எமது பெரும்பான்மைப் பலத்தை சிதைத்து, இருப்பை பலவீனப்படுத்தி, உரிமை கோரி நாம் எழுந்து நிற்க முடியாத நிலைமையைக் காலப்போக்கில் ஏற்படுத்தும் இலக்குடன், அரச மட்டத்திலும் – அதன் ஆதரவோடும் பல்வேறு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எமது தாயகத்தில், வரலாற்று ரீதியாக எமது வழிபாட்டு தலங்கள் அமைந்திருந்த பல்வேறு இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றங்கள் வழங்கிய கட்டளைகள் மீறப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் குருந்தூர்மலை, திருகோணமலையில் கன்னியா மற்றும் விளையாட்டரங்க சுற்றாடல், யாழ்ப்பாணத்தில் தையிட்டி ஆகிய இடங்களில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. குருந்தூர்மலையிலும், தையிட்டியிலும் பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. திருகோணமலையில் இலுப்பைக்குளத்தில், விகாரை ஒன்றுக்கான முன் நடவடிக்கைகள், ஆளுநரின் கட்டளையையும் மீறி. மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொல்பொருள் திணைக்களம், வனத் திணைக்களம். வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன எமது பெருந்தொகையான காணிகளை ஆக்கிரமித்து அபகரித்துள்ளன.

காணிகள் மீளக் கையளிக்கப்படும் என்று அரசு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

இதேவேளையில், மட்டக்களப்பு மாவட்டத்தில். மயிலத்தமடு – மாதவனை பிரதேசத்தில் தமிழ்ப் பண்ணையாளர்களின் பல்லாயிரக்கணக்கான கால்நடைகளின் மேய்ச்சல் தரவையாக மிக நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்த பாரிய பிரதேசத்தை, சிங்களக் குடியேற்ற வாசிகள் ஆக்கிரமித்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்ப் பண்ணையாளர்களின் கால்நடைகள் ஆக்கிரமிப்பாளர்களால் பெருந்தொகையில் பிடிக்கப்பட்டும், சுடப்பட்டும், கொல்லப்பட்டும் உள்ளன. இதனால் பண்ணையாளர்களின் வாழ்வே இருண்டு போய் உள்ளது. பயிர் அறுவடை முடிந்தவுடன் குடியேற்ற வாசிகள் வெளியேறி விடுவார்கள் என்று அரச தரப்பில் கடந்த வருடம் கொடுக்கப்பட்ட வாக்குறுதி காற்றோடு கலந்து போய் பல மாதங்கள் ஆகிவிட்டது.

ஆக்கிரமிப்பு தொடர்கின்றது. மறுபுறத்தில், குருந்தூர்மலை ஆலய வழக்கில் எமது மக்களின் வழிபாட்டு உரிமையை ஏற்றுக்கொண்டு தீர்ப்பளித்த முல்லைத் தீவு நீதிபதி, அச்சுறுத்தல்கள் மற்றும் கொலை மிரட்டல்களின் விளைவாக நாட்டை விட்டே தப்பிச் சென்றுள்ளார்.

யுத்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட பல நூற்றுக்கணக்கான படுகொலைகளில், சர்வதேசத்தைத் திருப்திப்படுத்த, சில வற்றுக்கு வழக்குகள் தொடுக்கப்பட்டதனை நீங்கள் அறிவீர்கள்.

மூதூர் – குமாரபுரம் படுகொலைகள் தொடர்பான வழக்கு அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டு, சிங்கள யூரி சபையினர் முன்பு விசாரணை செய்யப்பட்டதன் முடிவில், எதிரிகளான இராணுவத்தினர் அனைவரும் விடுதலை செய்யப்பட்டதை யார்தான் மறக்க முடியும்? அதைப்போலவே, மிருசுவில் படுகொலைகள் பற்றிய வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த இராணுவ அதிகாரிக்கு, கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்த பின், பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டதை எவரும் மறந்துவிட முடியாது.

மேலும், யுத்தம் மீண்டும் வெடித்த போது, 5 தமிழ் மாணவர்கள் திருகோணமலை கடற்கரையில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பிலும் நீதி மறுக்கப்பட்டது. கொழும்பில் வைத்து கடத்தப்பட்ட 11 தமிழ் இளைஞர்கள் திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவங்களிலும் உண்மை புதைக்கப்பட்டு விட்டது.

இவை எல்லாம் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களைச் செய்வோர் தண்டிக்கப்படாமல், தப்பிவிடுவார்கள் என்பதற்கு உறுதியும் உதாரணங்கள் ஆகும்.

இப்போது, நீதிக்காக துணிந்து நின்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு நேர்ந்திருக்கும் கதி தொடர்பிலும் உண்மை மழுப்பப்பட்டு, மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில், இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வரும் அநீதிகளையும், நீதி மறுக்கப்படுவதையும் உலகத்தின் கவனத்துக்கு மீண்டும் கொண்டு வரும் நோக்கத்துடனும், எமது மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு அவற்றில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதை கண்டித்தும், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரவையை ஆக்கிரமித்து இருப்போரை வெளியேற்றக் கோரியும், எமது தாயகமான வடக்கு – கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் எனப்படும் ஒரு பொது முடக்கத்துக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளாகிய நாம் ஒன்றிணைந்து அழைப்பு விடுக்கின்றோம்.

கிழக்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் இதற்கு வடக்கு ஆதரவு தர முன்வந்துள்ளன. இந்நிலையில், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நிகழவுள்ள இந்தப் பொது முடக்கத்திற்கு, வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாம் உரிமையுடன் வேண்டுகின்றோம்.

மேலும், எம் மக்கள் மத்தியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மனித உரிமை இயக்கங்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் உட்பட மாணவர் அமைப்புக்கள், மகளிர் உரிமை நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், வணிகர் கழகங்கள், சிவில் சமூக சங்கங்கள் மற்றும் மத ஸ்தாபனங்கள் உட்பட, பல்துறை சார்ந்த செயற்பாட்டு அமைப்புக்களின் ஆதரவையும் பங்களிப்பையும் இந்த மக்கள் போராட்டத்தில் நாம் நாடி நிற்கின்றோம்.” – என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகியன இணைந்து இந்தக் கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளன.

## டயானாவின் தலைவிதி...

பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பை அறிவிப்பதை எதிர்வரும் 31ஆம் திகதி வரை ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன, ஸ்வர்ணாதிபதி மற்றும் ஏ.மரிக்கார் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் இது தொடர்பான தீர்ப்பை இன்று அறிவிக்க விருந்தது.

ஆனால், இந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இது தொடர்பான தீர்மானம் எதிர்வரும் 31ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன தெரிவித்தார்.

இந்த மனுவை சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் சமர்ப்பித்திருந்தார். டயானா கமகே ஒரு பிரிட்டன் பிரஜை என மனுதாரர் கூறியிருந்தார்.

## வெறுக்கத்தக்க...

உட்பட 500 பேர் பலியாகியுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தை உலக நாடுகள் கண்டித்து வருகின்றன. இந்நிலையில், காசா வைத்தியசாலை மீதான தாக்குதலை வெறுக்கத்தக்க போர்க்குற்றம் என்று தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

2009ஆம் ஆண்டில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீதும் இலங்கை இராணுவத்தினர் இதே போன்றே தாக்குதல் நடத்திவிட்டு நொண்டிச்சாட்டையே தெரிவித்தனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

“இது மிகவும் வெறுக்கத்தக்க போர்க்குற்றம். தூண்டுதல்கள் இருந்தால் கூட வைத்தியசாலைகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள முடியாது” – என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எட்டாப் பழ முயற்சிகள்

'எட்டாப் பழம் புளிக்கும்' என்பார்கள். அப்படி ஓர் அறிவிப்பை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இன்று நாடாளுமன்றத்தில் விடுத்திருக்கின்றார்.

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவது என்பது ஒரு சிக்கலான மற்றும் கடினமான செயலாகும். தற்போதைய நாடாளுமன்றத்தில் அதனைச் செய்ய முடியாது. அது, இந்நாட்டு மக்களும் பங்குபற்ற வேண்டிய ஒரு விடயமாகவுள்ளது. அதனால் அதனை நீக்குவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் நாம் எடுக்கவில்லை" - என்று அவர் கூறியிருக்கின்றார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை இல்லாதொழிக்கும் ஒரு திட்டத்தின் மூலம், பிரதமராகத் தொடர்ந்து பதவியில் - அதிகாரத்தில் - நீடிக்கும் ஓர் எத்தனம் பற்றிய யோசனையையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மெல்ல அவிழ்த்து விட்டார். அந்த முயற்சிக்குத் தேவையான நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தமக்கு கிட்டாது என்பது தெரிந்ததும் - தெளிவானதும் - அவரது அரசு தரப்பு மெல்ல அந்த யோசனையிலிருந்து பின்வாங்குகின்றது. அவ்வளவுதான்.

இருப்பினும்,"நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளோம்." - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டிருக்கின்றார்.

இதன்படி, 160 உறுப்பினர்களை 'தொகுதிவாரி' முறையின் மூலம் தெரிவு செய்வதற்கும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களை தேசியப் பட்டியல் மூலமும் ஏனையவர்களை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் ஊடாகவும் தெரிவுசெய்யும் வகையில் யோசனையே முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம்தான் நாடாளுமன்றத் தேர்தல் முறையை மறுசீரமைக்கும் யோசனையை அரசாங்கம் முன்வைத்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருக்கின்றார்.

ஆனால், இந்த நாடாளுமன்றம் மக்கள் தனக்கு வழங்கிய ஆணையைக் கடந்த ஆண்டிலேயே இழந்து விட்டது என்பதுதான் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு. மக்கள் ஆணையை இழந்த நாடாளுமன்றம், அந்த ஆணையின்படி செயற்படுகின்றது என்ற கருத்தியலை எதிர்க்கட்சிகள் ஏற்க மாட்டா.

இந்தப் பின்புலத்தில் புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கான அரசின் முயற்சியும் எட்டாப்பழமானாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

## தொழில் முயற்சியாளர் பயிற்சிச் செயலமர்வு



(ஹஸ்பர்)

திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தால் சுற்றுச் சூழல் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் கரித்தாஸ் மிசெரியோவின் நிதியுதவியுடன் புதிய தொழில் முயற்சியளர்களுக்கான பயிற்சி செயலமர்வு எகெட் கறித்தாஸ் கேட்போர் மண்டபத்தில் நேற்று (17) இடம் பெற்றது

இந்த நிகழ்வானது பணிப்பாளர் அருட்பணி கலாநிதி.டீ.போல் றொபின்சன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் எகெட் கரித்தாஸ் சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர்களான கே.ரஜித், ஏ.எம்.பிரசாத், எம். டினேஷ், ஆகியோர்கள் இணைந்து செயலமர்வினை முன்னெடுத்தனர் .

## அத்தியாவசிய சேவைகளை சுட்டிக்காட்டி வர்த்தமானி!

மருத்துவம் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட பல சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால், ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் பிரிவு 2 இன் படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மின்சார விநியோகம் மற்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளும் மேலும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற நோயாளிகளுக்கான பராமரிப்பு, வரவேற்பு, உணவு பராமரிப்பு மற்றும் சிகிச்சை ஆகியவற்றிற்கு தேவைப்படும் அல்லது செய்ய வேண்டிய வேலைகள் மேலும் அத்தியாவசிய சேவைகளாகும் என்று வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யானைப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வு!



(ஹஸ்பர்)

கந்தளாய் பிரதேசத்தில் யானைகளின் பிரச்சினை தொடர்பில் நிறுவப்பட்ட குழுவின் முன்னேற்றம் குறித்து ஆராயும் மூன்றாவது கூட்டம் நேற்று (17) நடை பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் கந்தளாய் பிரதேச செயலாளர் திருமதி உபேக்சா குமாரி தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் அரச திணைக்கள அதிகாரிகள், பிரதிநிதிகள், கிராம உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.




# 9 லட்சம் சாரதி அனுமதிப் பத்திரங்கள் போக்குவரத்துத் துறையில் தேக்கம்!

## அச்சிடுவதில் ஏற்பட்டுள்ள தாமதமே காரணம்

மோட்டார் போக்குவரத்து துறையில் அச்சிடுவதற்காக குவிந்துள்ள சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை, ஒன்பது லட்சத்தைத் தாண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டை பற்றாக்குறை மற்றும் போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் ஒரு வருடத்துக்கு முன், சாரதி அனுமதிப் பத்திரம் அச்சிட, அட்டைகளை இறக்குமதி செய்ய முடியாத நிலை காணப்பட்டது.

பின்னர், ஆஸ்திரியாவில் இருந்து 10 லட்சம் அட்டைகள் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சிப் கொண்ட ஐந்து லட்சம் அட்டைகளும், கியூ. ஆர். குறியீடு கொண்ட ஐந்து லட்சம் அட்டைகளும் இறக்குமதி செய்யப்பட்ட போதிலும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் சாரதி அனுமதிப் பத்திர அலுவலகத்தால் தினதும்ம் அச்சிடப்படும் அட்டைகளின் எண்ணிக்கை 2000ஆகும்.

அங்கு இரண்டு இயந்திரங்கள் மட்டுமே நல்ல நிலையில் உள்ளன. சிப் உள்ள 5 லட்சம் அட்டைகளும் அச்சடிக்கப்பட்டுள்ளதால், கியூ. ஆர். குறியீடு கொண்ட அட்டைகளை அச்சடிக்கும் பணி நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


இம்மாதம் மேலும் மூன்று அச்சு இயந்திரங்கள் பெறப்படவுள்ளதால், அடுத்த மாதம் முதல் நாளொன்றுக்கு 1000 தொடக்கம் 7000 வரையான சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப் படும் என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதனால், அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் சாரதி அனுமதிப்பத்திரம் ஆறு மாதங்களில் கிடைக்கும் என்று ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தற்போது தற்காலிக பத்திரம் பெற்றவர்களின் உரிமம் காலாவதியாகி இருந்தால், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அலுவலகம் அல்லது மாவட்ட அலுவலகங்களில் காலத்தை நீட்டிக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் - ஹமாஸ் போரால் இலங்கைக்கு நேரடித் தாக்கம்!

## உதய கம்மன்பில எம்.பி. சுட்டிக்காட்டு



மத்திய கிழக்கில் யுத்தம் தீவிரமடைந்துள்ள நிலையில், அதன் பாதிப்பு இலங்கைக்கு நேரடியாக தாக்கம் செலுத்தும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற அமர்வின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் – ஹமாஸ் அமைப்புகளுக்கு இடையிலான போர் நாளுக்கு நாள் தீவிர நிலையை அடைந்து வருகிறது. இந்தச் சூழலில், அது இலங்கையில் நேரடியான தாக்கத்தைச் செலுத்தக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

மத்திய கிழக்கில் பணிபுரியும் பல லட்சக் கணக்கான இலங்கையர்கள் பாதிக்கப்படுவார்கள். அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளுக்கான தேயிலை மற்றும் ஏனைய ஏற்றுமதி சேவைகள், வெளிநாட்டு முதலீடுகள், சுற்றுலா கைத்தொழிற்றுறை ஆகிய சேவைத்துறைகள் பாதிக்கப்படும்.

மத்திய கிழக்கில் நிலவும் மோதலால் இலங்கைக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பில் ஒரு நாள் சபை ஒத்திவைப்பு விவாதம் நடத்துவது அவசியமானது.

ஆகவே இவ்விடயம் தொடர்பில் நாளை வியாழக்கிழமை (19) இடம்பெறவுள்ள கட்சித் தலைவர் கூட்டத்தில் கவனம் செலுத்துமாறு வலியுறுத்துகிறேன்.

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எமது உறுப்பினர்கள் எவரும் நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை.

அதற்கான அனுமதியும் இதுவரை வழங்காத காரணத்தால் சபை அமர்வின் போது இந்த கோரிக்கையை நேரடியாக முன்வைக்கிறேன்.- என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை சட்டவிரோதமாக நடத்தி வந்தவர் கைது!

கொழும்பில் வாடகை வீட்டில் சட்ட விரோதமான முறையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தை நடத்தி வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்த நபரிடம் 32 கடவுச் சீட்டுகள், 3 தேசிய அடையாள அட்டைகள், பிரதேச செயலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமான 9 உத்தியோகபூர்வ முத்திரைகள், 5 கிராம சேவை சான்றிதழ்கள், 9 பிறப்பு மற்றும் திருமண சான்றிதழ்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.



ராகம – சிறிவர்தன வீதியில் சட்டவிரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்ஒன்று இயங்கி வருவதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அங்கு சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, இந்த வீடு 6 மாதங்களுக்கு முன்னர் 8,500 ரூபா வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டமை தெரியவந்துள்ளது.

இத்தாலி உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு அனுப்புவதாக கூறிய, 3 லட்சம் ரூபா முதல் பெருந்தொகை பணம் சந்தேக நபரால் பெற்றுக்கொள்ளப்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நுகேகொட – மஹரகம பகுதியைச் சேர்ந்த 67 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அனுராதபுரம் தோட்டக் கிணற்றில் பெண் குழந்தை சடலமாக மீட்பு!

## தாய் வைத்தியசாலையில் அனுமதி

அனுராதபுரத்தில் தோட்டக் கிணற்றில் விழுந்த தாயும் அவரது மூன்று மாத பெண் குழந்தையும் மீட்கப்பட்டுள்ளனர். எனினும் குழந்தை உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தாயான சந்தருவனி பிரார்தனா மற்றும் அவரது 3 மாதக் கைக்குழந்தை ஆகியோர் கிணற்றில் விழுந்துள்ளனர்.

பெண் வசிக்கும் வீட்டில் இருந்து சுமார் 300 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள கிணற்றில் இருந்து குழந்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பின்னர் பிரதேசவாசிகள் அவசர அழைப்புப் பிரிவு 1990 இற்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட நிலையில் அம்புலன்ஸ் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டு ஆபத்தான நிலையில் இருந்த குழந்தையின் தாயான பெண் கலென்பிந்துனுவெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த பெண் பிரசவம் முடிந்து தனது தந்தை வசிக்கும் வீட்டுக்கு வந்து தங்கியிருந்துள்ளார்.

இந்த நிலையில் வீட்டுக்கு அருகில் உள்ள தோட்டத்தில் உள்ள கிணற்று பகுதிக்குச் சென்று குழந்தைக்குப் பால் கொடுத்த போது குழந்தை தவறிக் கிணற்றில் விழுந்தது என்று தாய் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குழந்தையை காப்பாற்ற தானும் கிணற்றில் குதித்ததாக தாய் குறிப்பிட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# ஹர்த்தாலால் ஏற்படப் போகும் பாதிப்புக்களை சுட்டிக்காட்டித் தென்மராட்சியில் துண்டுப் பிரசுரம்

(த.சுபேசன்)

எதிர்வரும் 20 ஆம் திகதி தமிழ் அரசியல் கட்சிகளால் வடக்கு – கிழக்கு மாகாணங்களை மையமாக கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஹர்த்தாலால் ஏற்படவுள்ள பாதிப்புக்களை சுட்டிக்காட்டி சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் தென்மராட்சி மக்கள் உரிமை பாதுகாப்பு அமைப்பு துண்டுப்பிரசுரம் வழங்கியுள்ளது.

குறித்த துண்டுப்பிரசுரத்தில்,

இலங்கையில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் வடக்கு–கிழக்கு மாகாணங்களை முடக்குவதால் பாதிக்கப்படப்போவது யார்?, இந்தக் ஹர்த்தால் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கப்போகும் தீர்வு என்ன?, காலங் காலமாக முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தாலால் தமிழ் மக்கள் அடைந்த இலாபம் என்ன?, தெற்கை முடக்கினால் வரவேற்கத்தக்கது. ஆனால் வடக்கு, கிழக்கை முடக்கிப் பாதிப்புள்ளாக்கும் வகையில் செயற்படுவதை ஏற்க முடியாது, நாட்டில் தொடரும் வங்குரோத்து நிலையில் வியாபாரிகள் வியாபாரம் இல்லாது அல்லாடி வரும் நிலையில் இவ்வாறான கடையடைப்பின் மூலம் கிடைக்கப்போகும் நன்மை என்ன?, கொரோனா பெருந்தாக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு மக்கள் மீள முடியாமல் உள்ள வேளையில் ஹர்த்தால் எவ்விதத்தில் நியாயமானது?, ஒன்றுசேர முடியாத தமிழ் கட்சிகள் தமிழ் மக்களின் அபிலாசைகளை எப்போது நிறைவேற்றுவார்கள்?,அரசியல் நாடகமாடும் செயற்பாட்டால் மக்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை, அரசியல் கட்சிகள் தங்களின் இருப்பிற்கும்–வாக்கு வங்கியை சரிய விடாமல் காப்பாற்றுவதற்குமே இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றன என்பதனை நினைவில் கொள்ளுங்கள் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

துண்டுப்பிரசுரங்கள் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொதுச் சந்தையில் வியாபாரிகள், பொதுமக்கள் ஆகியோருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

# தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து கிடைக்காமை கவலை தருகின்றது

## இம்ரான் எம்.பி. தெரிவிப்பு

(ஹஸ்பர்)

தமிழ்மொழி பேசுவோர் 75 வீதம் வாழ்கின்ற திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படாமை குறித்து மிகவும் கவலையடைகின்றேன் என்று திருகோணமலை மாவட்டப் நாடாளு மன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற திருகோணமலை மாவட்ட ஒருங் கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உரை யாற்றும் போது இவ்வாறு அவர் தெரி வித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பி னர்களான ஏ.எல்.எம்.அதாவுல்லா, கபில நுவான் அத்துக்கோரள ஆகியோ ரின் இணைத்தலைமையின் கீழ் நடைபெற்ற இக்கூட்டத்தில் உரையாற் றிய அவர் மேலும் கூறியதாவது,

திருகோணமலை மாவட்டத்தில் தமிழை தாய் மொழியாகக் கொண்ட தமிழ், முஸ்லிம் மக்கள் சுமார் 75 வீதத்துக்கும் மேல் வாழ்கின்றனர். அதேபோல ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்துக்குச் சமூகமளித்துள்ள அதிக மான அதிகாரிகளும் தமிழ் மொழி பேசுவோராகவே உள்ளனர்.

இந்த நிலையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் அதிகமான விட யங்கள் சிங்கள மொழியிலேயே முன் னெடுக்கப்படுகின்றன.

சிங்கள – தமிழ் மொழி பெயர்ப்பா ளர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் பல அதிகாரிகள் தமது கருத் துக்களை சரியாக முன்வைப்பதில் இடர்பாடுகளை அனுபவிப்பதைக் அவ தானிக்க முடிகின்றது.

கடந்த காலத்தில் இருமொழிகளுக் கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டு ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப் பட்டன. மொழி பெயர்ப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு சமகாலத்தில் மொழி பெயர்ப்புச் செய்யும் வசதிகள் செய்யப் பட்டன. இதனால் யாரும் தமது கருத்துக் களை தெளிவாகச் சொல்லக் கூடியதா கவும், கேட்கக் கூடியதாகவும் இருந்தது.

தற்போது அந்த நிலை மாற்ற மடைந்து காணப்படுகின்றது. திரு



கோணமலை மாவட்டம் தமிழ் மொழி பேசுவோர் அதிகமுள்ள மாவட்டம் . இந்த மாவட்டத்திலேயே தமிழ் மொழி புறக்கணிப்படுவது குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன் .– என்றார்.

இதற்குப் பதிலளித்த அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, இந்தக் குறைபாட்டை நானும் உணர்கின்றேன். தவறு இடம்பெற்றுள்ளமை தெரிகின் றது. அடுத்துவரும் கூட்டங்களில் இது போன்ற குறைபாடுகள் வராது கவனித் துக் கொள்வேன் எனத் தெரிவித்தார்.



# சுற்றுலாத்துறை முன்னேற்றத்துக்கு இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பு

(அ.அஸ்வர்)

இலங்கையில் சுற்றுலாத்துறையின் முன்னேற்றத்துக்காக 2500 இளை ஞர்களுக்கு விருந்தோம்பல் துறைக்காக பயிற்சியளிக்கும் வேலைத்திட்டம் நாடு முழுவதும் தற்பொழுது ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

இதன்படி மாத்தளை மாவட்ட அங்கு ரார்ப்பண நிகழ்வு மாத்தளை மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) செல்வி றிஷ்மினா றியால்டீன் தலைமையில் மாவட்ட செயலக வீரபுரன் அப்பு மண்ட பத்தில் அண்மையில் இடம்பெற் றது.

இத்திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட் டத்திலுள்ள நூறு இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சித் திட்டம் நடைமுறை மற்றும் தத்துவார்த்த அம்சங்களுடன் 20 நாள்களுக்கு நடத்தப்படுகின் றது.

மத்திய மாகாண ஹோட்டல் பாட சாலை அதிபர் குமுதுனி விக்கிரமசிங்க, பாடப் பயிற்றுவிப்பாளர்களான லக்ஷ் மன் விக்கிரமசேகர, மலர் சுந்தரப் பிள்ளை, நிகழ்ச்சியின் மாவட்ட இணைப் பாளர் திநுக ஹேரத், அரச அதிகாரிகள் மற்றும் பயிற்றுவிக்க எதிர்பார்க்கப்படும் இளைஞர் குழுவினர் இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# 120 கண் புரை நோயாளர்களுக்கு அம்பாறையில் இலவச சத்திர சிகிச்சை!

## லண்டன் புனர்வாழ்வும் புதுவாழ்வும் அமைப்பு உதவி

(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த நான்கு வருடங்களாக சத்திர சிகிச்சைக்காக காத்திருந்த கண்புரை நோயாளர்கள் 120 பேருக்குச் சத்தி ரசிகிச்சை இலவசமாக மேற்கொள்ளப் பட்டுள்ளது.

லண்டன் புனர் வாழ்வும் புதுவாழ்வும் என்ற அமைப்பு இலவசமாக அம்பாறை பொது வைத்தியசாலையில் இந்தச் சத்திர சிகிச்சைகளை நடத்தி வைத்த னர்.

புனர்வாழ்வும் புது வாழ்வும் அமைப்பின் தலைவர் பொறியியலாளர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன் மற்றும் இலங்கைக்கான தலைவர் பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் ஆகியோர் முன்னிலையில் சிகிச்சை கள் இடம்பெற்றன.

கொழும்பு தேசிய வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜயசிரி டயஸ் தலைமையிலான குழு வினர் இந்த சத்திர சிகிச்சைகளை மேற் கொண்டனர்.

இந்த மனிதாபிமான மணிக்கு மலேசியா ஆனந்தா பவுண்டேஷன் மற்றும் அலாகா பவுண்டேஷன் அனுச ரணை வழங்கினர்.




# பாக்கு நீரிணையை மீண்டும் கடக்கவுள்ள புனித மைக்கேல் கல்லூரி மாணவர்கள்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூ ரியின் மூன்று மாணவர்கள் இணைந்து பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து மீண்டும் ஒருமுறை சாதனையை நிலை நாட்டவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை (17) திகதி இரவு புனித மிக்கேல் கல்லூரியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது கல்லூரியின் அதிபர் அன்ரன் பெனடிக் ஜோசப் தெரிவித்தார்.

புனித மிக்கேல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி புனித மிக் கேல் கல்லூரியின் சிரேஷ்ட சாரண மாணவர்கள் மூவர் இணைந்து இந்தியா வின் தனுஷ்கோடியில் இருந்து பாக்கு நீரிணைணைக் குறுகிய நேரத்தில் கடந்து தலைமன்னாரை வந்தடைந்து மீண்டுமொருமுறை சாதனையை நிலை நாட்டவுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

பாக்கு நீரிணையை கடக்க இருக்கும் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூ ரியின் 03 மாணவர்களுள், இருவர் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது இந்தியாவின் தனுஷ கோடியிலிருந்து பாக்கு நீரிணையைக் நீந்தி இலங்கையின் தலைமன்னாரை வந்தடைந்தடையவுள்ள சிரேஷ்ட சார ணர்களான புளோரிங்டன் டயன்ஸ்ரித், புளோரிங்டன் டயன் பிறிடோ மற்றும் இருதயநாதன் கெல்வின் கிசோ ஆகி யோர் பிளாஸ்டிக் தொடர்பான விழிப்பு ணர்வை ஏற்படுத்துவதற்காகவே குறித்த சாதனையை நிலைநாட்டவுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

இந்தச் ஊடக சந்திப்பில் பாடசாலை அதிபர் அன்ரன் பெனடிக் ஜோசப், மாவட்ட சாரணர் ஆணையாளர் விவேகா னந்தா பிரதீபன், சாரண ஆசிரியர் இன்னாசி கிறிஸ்டி மற்றும் சாரண மாணவர்கள் உள்ளிட்ட பெற்றோரும் கலந்து கொண்டனர். அதிபர் மற்றும் சாரண ஆணையாள ரால் இவர்களுக்கு வாழ்த்து தெரிவிக் கப்பட்டது. கொடிச் சீலைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாண வரும் ஜனாதிபதி விருது பெற்ற சிரேஷ்ட சாரணருமான தவேந்திரன் மதுஷிகன் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து ஏற்கனவே சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனித வாழ்வுக்கு அடித்தளமாக அமையும் முதல் நிலை கல்வி...!



ஒன்று தொடக்கம் 5 வகையான வகுப்புகளை கொண்ட மைந்த கல்வி நிலையானது 1920 ஆம் ஆண்டில் முதல் இலக்க கட்டளை சட்டத்தின் கீழ் ஆரம்பக் கல்வி தொடர்பான ஒழுங்கு விதியின் கீழ் உட்பட்டவாறு உருவாக்கப்பட்டுள்ளது.

1929 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மீள வாய்ப்பட்ட விதி கோவையின் முதல் நிலை வகுப்பாக ஐந்தாம் தரத்தை முடிவெல்லையாகக் கருதி இந்தக் கல்வி நிலையானது தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை பாடசாலைக்கு அமைய கல்வித் திட்ட திணைக்களத்தால் கல்வி பாடத் தொகுதி முறைத் திட்டம் வெளியிடப்பட்டது.

ஆரம்பக் கல்வி தன்னார்வமானது மற்றும் முற்றிலும் தனிப்பட்ட ரீதியிலே செயற்படுத்தப்படுகின்றது. பெரும்பாலான பாடசாலைகள் நகரப் புறங்களில் உள்ளன. ஆரம்பக் கல்வியில் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகள் அடங்கப்பட்ட நிலையில் கல்வியானது இலவசமாகவும் கற்பிக்கப்படுகின்றது.

ஆனால், பாரம்பரியத்தின் படி 1999 ஆம் ஆண்டுவரை இலங்கை அரசு ஒரு சீர் திருத்த திட்டத்தின் ஒரு பகுதியாக ஆரம்பக் கல்வியை கட்டாயமாக்கும் புதிய விதிமுறைகளை ஸ்தாபிக்கும்வரை கட்டாயமாக இருக்கவில்லை.

ஐந்து முதல் பத்து வயதுவரை உள்ள குழந்தைகளின் 14 சதவீதம் பேர் பாடசாலைக்கு சமூகமளிப்பதில்லை. பாடசாலை வருகையை உயர்த்திக் கண்காணிக்கும் அதிகாரத்துடன் கிராமக் குழுக்களுக்கு இப்போது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கல்வி கற்பதற்கு வருகையை ஊக்குவிக்கும் முகமாக மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

இலங்கையில் 90 சதவீதமான பிள்ளைகள் ஆரம்பக் கல்வியில் பயில்வதாக சமீபத்திய புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தொடக்கக் கல்வியின் முதல் மூன்று ஆண்டுகளுக்கான பாடத்திட்டம் மதம், தாய் மொழி, ஆங்கிலம் மற்றும் எண்ணிக்கைகளாக அடங்குகின்றன. தரம் நான்கில் அதே பாடங்கள் தொடரப்பட்ட நிலையில் உடற்கல்வி, ஆக்க பூர்வமான செயற்பாடுகள் ஒரு பயனுள்ள பங்கை ஊக்குவிப்பதாகும்.

எனவே, 2003 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கல்வியினுடைய இலக்குகளில் காணப்படும் தேர்ச்சிகள் முதலாம் நிலைக் கல்வியினுடைய முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறான முதலாம் நிலைக் கல்வியானது எதிர்கொள்ளும் சவால்களாக, வளப் பற்றாக்குறை, பயிற்றப்பட்ட ஆசிரியர்களுடைய பற்றாக்குறை, பிள்ளைகளுடைய வரவின்மை, முன்பள்ளி ஆசிரியர்களுடைய பற்றாக்குறை, சமனற்ற பரம்பல், போசாக்கின்மை மற்றும் குடும்ப சூழல், பரீட்சைகளை மாத்திரம் மையமாகக் கொண்ட கற்றல், இடைவிலகல், நிதி ஒதுக்கீடு இன்மை போன்ற பல்வேறுபட்ட சவால்களை அன்று தொடக்கம் இன்று வரை முதலாம் நிலைக் கல்வி எதிர்கொண்டு வருகின்றது.

அந்தவகையில்பெரும்பான்மையான கல்வியாக, எழுத்து கல்வி முறையே இன்றும் காணப்படுகின்றது. தன்னார்ந்த ரீதியில் அவர்களுடைய ஆற்றல்களை வெளிப்படுத்துமாறு காணப்படும் கல்வியைத் தற்போதைய காலகட்டங்களில் பார்ப்பது மிகவும் குறைவாகவே உள்ளது.

ஒன்று தொடக்கம் 5 வரையான ஆரம்ப பாடசாலையானது ஐந்தாம் தரத்தில் நடைபெறும் புலமைப் பரிசில் பரீட்சையை மையமாகக் கொண்டது. பரீட்சைக்காகவே தரம் 3,4,5 இல் உள்ள மாணவர்களுக்கான கல்வி புகட்டப்படுகின்றது.

எனவே, அத் தரங்களில் காணப்படும் மாணவர்களுக்கு இயற்கையான முறையில் அமையப் பெறும் கல்வி கிடைப்பதாகத் தெரியவில்லை.

இன்னும் மேலும் திறன்களை வளர்க்கவும், இணைப் பாட விதான செயற்பாடுகளில் தம்மை ஊக்குவிக்கவும் முயற்சி செய்யும் பொழுது பரீட்சைகளும் போட்டி சூழலும் இடையூறாகின்றன.

எமது கல்வி முறையானது துறை ரீதியாக ஒழுங்கமைக்கப்படாததே இதற்குக் காரணமாகும். எண்ணறிவு, எழுத்தறிவு வளர்க்கப்படுவது ஆரம்பக் கல்வியினுடைய முக்கிய பங்கு. ஆனால், பிள் ளையின் எதிர்காலத்துக்கு சிறந்தது எது என்பது தொடர்பான அடிப்படை ஊக்கப்படுத்தல் கூட அங்கு இல்லை.

எமது நாட்டைப் பொறுத்தமட்டில் பரீட்சையை மையமாகக் கொண்டு காணப்படும் கல்வி முறையானது இன்று வரையிலும் அழியாத ஒன்றாகும்.

உளரீதியாக மாணவர்களுடைய தாக்கமானது ஐந்தாம் தர புலமைப் பரிசில் ஊடாக விதைக்கப்படுவதால் சிறு வயதில் அவர்களிடையே உள்ள இயற் கையாக வெளிப்படுத்தப்படுகின்ற ஆற் றல்களும் திறன்களும் முடங்கிப் போய்விடும்.

இயற்கையான திறன்களை வெளிப்படுத்தும் விதமாக இலங்கையில் அனுராதபுரத்தில் அழகப் பெருமானை பகுதியில் பிறந்த ஒன்றரை வயது பெண் குழந்தை ஒன்று உலக சாதனை படைத்துள்ளது. இப் பெண் பிள்ளையானது ஏழு நிமிடம் மற்றும் 6 வினாடிகளில் அதிக எண்ணிக்கையிலான பறவை களை அடையாளம் கண்டு உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

அதுமாத்திரமன்றி, இந்தியாவில் குழந்தை ஆரோகி, ஒன்றரை வயதில் அதிக பட்சமான படங்களை அடையாளம் கண்டு, அதனுடைய பெயர்களையும் கூறி, படங்களுடைய சிறப்பம்சங்களையும் எடுத்துரைத்துள்ளது. இந்தக் குழந்தையும் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.

அது மட்டுமல்லாது தேஜஸ் எனப்படும் மூன்று வயது ஆண் பிள்ளை 80 நாடுகளுடைய கொடி மற்றும் அந்நாடுகளினுடைய பெயர்கள் என்பவற்றைக் கூறி, இந்தியாவில் சேலம் பகுதியில் "கலாம் வேர்ல்ட்" சாதனை படைத்துள்ளது.

இவற்றை நான் கூற முற்பட்டதன் விளைவு இப் பிள்ளைகள் சிறு வயதிலிருந்து அவர்களுடைய தன்னார்வத் திறன்களை வெளிப்படுத்தியுள்ளனர். எனவே, அவர்கள் வளர்ந்து முதலாம் நிலை கல்வியைம் தொடரும் பட்சத்தில் அவர்களுடைய திறன்கள் மேலும் மெருகேற்றப்பட வேண்டுமே தவிர, அத் திறன்களை அடக்கி வெறுமனே புத்தகப் படிப்பை மாத்திரம் ஊட்டுவது சிறப்பானதோர் காரியமா? என நீங்களே கூற வேண்டும்.

இவ்வாறான சிக்கல்களே இலங்கையின் முதலாம் நிலைக் கல்வியின் தற்கால சூழ்நிலை.

சிங்கப்பூர், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளுடைய முதலாம் நிலை கல்வித் திட்டத்தை எடுத்து நோக்கும் பொழுது, அக் கல்வித் திட்டங்கள் அனைத்தும் வெறுமனே புத்தகப் படிப்பு அல்ல. அதற்குப் பதிலாக அவர்களுடைய உள்ளார்ந்த திறன்களை வெளிப்படுத்து முகமாக பல்வேறுபட்ட பாடத்திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. உதாரணமாக நீச்சல், விளையாட்டுக்கள், உற்பத்திப் பொருள்களின் விற்பனைகள், சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு பட்ட திறன்களை விருத்தி செய்யும் முகமாகவே அவர்க

(12ஆம் பக்கம் பார்க்க)

# மனித வாழ்வுக்கு...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுடைய கல்வி நடவடிக்கையானது காணப்படுகின்றது.

அது மாத்திரமல்லாது, அது 7 வயதுக்குப் பிற்பட்ட காலப் பகுதியில் முதலாம் நிலை கல்வியானது போதிக்கப்படுகின்றது. ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில் வெறுமனே புத்தகக் கல்வியானது “கிணற்றுத் தவளை போல்” எனப்படுகின்ற வாசகத்துக்கு ஒப்பாக காணப்படுகின்றது.

அது மாத்திரமில்லாது, ஆசிரியர்களுடைய பற்றாக்குறை மேலும் விரித்துக் கூறுவோமாயின் பயிற்றப்பட்ட ஒழுங்கான நெறி முறைக்கு உட்பட்ட கற்றறிந்த ஆசிரியர்களுடைய பற்றாக்குறை. குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் காணப்படும் முதலாம் நிலைக் கல்வி தனிப்பட்ட ரீதியில் போதிக்கப்படுகின்ற அதாவது இடைநிலைக் கல்வியோடு இணைப்பில் அல்லாத தன்னார்ந்த ரீதியில் காணப்படுகின்ற பாடசாலைகளில் ஒன்று தொடக்கம் 5 வகையான தரங்கள் மாத்திரம் காணப்படும் பாடசாலைகளில் பற்றாக்குறை நிலவி வருவது மிகவும் வருத்தத்துக்குரியது.

அப்பாடசாலைகளில் ஒரு ஆசிரியர் மூன்று தரங்களுக்கு வகுப்பாசிரியராகச் செயற்பட்டு வருகின்ற அளவுக்குப் பற்றாக் குறை. ஒழுங்காக நெறிமுறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பாடத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. தற்கால இலங்கையில் காணப்படும் கிராமப் பகுதிகளில் காணப்படும் முதலாம் நிலைக் கல்வி இச் சவால்களையும் எதிர் கொள்கின்றது.

அடுத்த கட்டமாக பேசப்படுவது, வளங்களுடைய சமனற்ற பரம்பல். அதாவது பாடசாலை அன்று தன்னார்ந்த ரீதியில் இயங்கப்பட வேண்டுமெனில், அதற்கு வளங்கள் என்பது முக்கியமான ஒன்று. முற்கால கட்டத்தில் இருந்து தற்காலம் வரை வளங்களினுடைய பற்றாக்குறையானது பேசப்படும் ஒரு பொருளாக மாறி வருகின்றது. பெரிதும் கூறப்போனால் கிராமப் புற பாடசாலைகளை இவ்வாக்கியத்தின் பேசு பொருள் பிள்ளைகள் கற்கக் கூடிய மேசை, கதிரைகளாகட்டும் மேலும் அவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய விளையாட்டுப் பொருள்களாகட்டும் கட்டட வசதிகளாகட்டும் என பல்வேறுபட்ட வளங்களினுடைய தட்டுப்பாடானது தற்கால முதலாம் நிலைக் கல்வியை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு ஒரு பாரிய நெருக்க எனலாம்.

இந்தச் சவால்கள் எவ்வாறு நிவர்த்தி செய்யப்படப் போகின்றது என கேட்டால் அதற்குக் கேள்விக் குறியே விடையாக காணப்படும். ஏனெனில், கூடியளவு அபிவிருத்தி அடைந்து வரும் இலங்கையானது கல்வியினுடைய அபிவிருத்தியில் இப்படிப்பட்ட பல்வேறுபட்ட சிக்கலுக்கு உண்டான கிராமப்புறப் பாடசாலைகளை எதிர்கொண்டு சிக்கல்களை நிவர்த்தி செய்வார்களாயின் எதிர்காலத்தில் முதலாம் நிலைக் கல்வியில் சவால் எனக் கூறக் கூடிய வளப்பற்றாக்குறை இல்லாதொழியும்.

இவ்வாறு சவால்களை அடுக்கிக் கொண்டு செல்லும் போது, போசாக்கின்மை மற்றும் குடும்ப சூழல் பெரும் சவாலாகக் காணப்படுகிறது.

காலையில் எழுந்து மாணவன் ஒருவன் பாடசாலைக்கு வருகின்ற பொழுது அவன் காலை உணவு உட்கொள்ளாமல் பாடசாலைக்கு சமூகமளிப்பானாக இருந்தால் அவனால் காலைப் பிரார்த்தனையில் கூட முழுமையாக பங்கு பெற்ற முடியாது.

அதனை அடுத்து பாடத்தில் முழுமையான கவனத்தைச் செலுத்த முடியாது. ஒரு பதகளிப்பு பின் நடத்தையில் மாற்றம் என்பன அவன் மேல் ஏற்படும். ஒரு பாட வேளையின் பின்னர் முதலாம் நிலைக் கல்வி போதிக்கப்படும் பாடசாலைகளில் போசாக்கு உணவு வழங்கப்படுகின்றது. எனவே, இவ்வாறான செயற்பாடு தாக்கத்தை ஏற்படுத்தாது.

கல்வியினுடைய சமனற்ற பரம்பல் முதலாம் நிலைக் கல்வியினுடைய அடுத்த சவாலாகக் காணப்படுகின்றது.

அதாவது மாணவர்களின் வாழ்க்கை முதல் படி எனத் தொடங்குகின்ற முதலாம் நிலைக் கல்வியினுடைய செயற்பாடுகள் நகரப்புறம் கிராமப்புறம் என இருவகையாக எம்மால் நோக்க முடியும்.

நகர்ப்புறப் பாடசாலைகளில் ஒரு சிறப்பான கல்வியை அதாவது குடும்ப சூழல், குடும்பப் பின்னணி, பெற்றோரின் பங்களிப்பு, மாணவர்களின் ஆற்றல்கள் மற்றும் திறமைகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள், மாணவர்களுடைய பங்காற்றல் எனப் பல்வேறுபட்ட விடயங்கள் நகர்ப்புறங்களில் உயர் நிலையைக் கொண்டிருக்க, அதே கல்வியானது கிராமப்புறங்களில் வழங்கப்படும் போது பெற்றோர்களுடைய பங்களிப்பு குறைவாகவும், பிள்ளைகளுடைய குடும்ப சூழலானது பின் தங்கிய நிலைகளிலும் (காலை உணவு இன்மை, தாய் தந்தையர்களுக்கு இடையே முரண்பாடு) பிள்ளைகளுடைய ஆர்வமின்மை, பெற்றோர்களுடைய கவனயீனம் போன்ற பல்வேறுப்பட்ட காரணங்கள் கிராமப்புற பாடசாலையைச் சூழ்ந்திருக் கின்றன.

எனவே, இவ்வாறான ஒரு சமனற்ற பாங்கானது முதலாம் நிலைக் கல்வியினுடைய பாரிய பிரச்சினைகளில் ஒன்று.

அது மாத்திரமன்றி, நகர்ப் புறங்களில் கூடுதலாக முதலாம் நிலைக் கல்வியைத் தொடர்வதற்கு முன்னர் மாணவர்களை பிரத்தியேக ரீதியிலான கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவர். முக்கியமாக ஆங்கிலக் கல்வி மற்றும் கணிதப் புலமை மேலும் எழுத்துப் பயிற்சி, வாசிப்புப் பயிற்சி போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்கு நகரப்புறங்களில் மேலும் பணம் படைத்தவர்கள் இச்செயற்பாட்டில் மாணவர்களை உள்ளீர்க்கின்றனர்.

ஆனால், மிகவும் பின்தங்கிய கிராமப் பகுதியில் இருக்கும் மாணவர்களும் வசதி வாய்ப்பற்ற குடும்பங்களுடைய மாணவர்களும் நேரடியான கல்வியை முன்பள்ளியைத் தொடர்ந்து முதலாம் நிலைக் கல்விக்கு உள்ளீர்க்கப்படுகின்றனர்.

அவர்களுக்கு சரியான வாசிப்புப் பயிற்சியை அல்லது எழுத்துப் பயிற்சியை ஆசிரியர்கள் சிறப்பான ஒரு நோக்கு கையில் வழிநடத்த வேண்டும்.

பல்வேறுபட்ட எனது பார்வைக்கு உட்பட்ட பெரிய பாடசாலைகளில் சில மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றனர். அதாவது முதலாம் தரத்தைத் தொடர்ந்து சரியான ஒரு முன்னேற்றம் இல்லாத இரண்டாம் வகுப்புக்கு ஏற்றப்படுகின்றனர். அதிலும் மாணவர்கள் சரியான ஓர் ஊக்கப்படுத்தல் இன்றி, வழி நடத்தல்கள் இன்றி மூன்றாம் வகுப்புக்கும் இறுதியாக புலமைப் பரிசில் பரீட்சைக்கும் அனுப்பப்படுகின்றனர். அவ்வாறான பின் தங்கிய நிலையில் காணப்படும் மாணவர்கள் தொடர்ச்சியாகப் பின் தங்கிய இடத்திலே இருக்கின்றனர். இதற்கு யார் காரணம்? என்பதை எம்மால் கூற இயலாது. ஆசிரியர்களோ? அல்லது மாணவர்களுடைய செயற்பாட்டுத் தன்மையில் ஏற்படும் குறைவோ? என்பது கேள்விக்கு உரியதாகும்.

ஆகவே, முதலாம் நிலைக் கல்வியினுடைய சவால்களையும் சூழ்ந்து இருக்கும் பிரச்சினைகளையும் இவ்வாறு அடுக்கிக் கொண்டே செல்லும் நிலையில், ஓர் அடித்தளத்தில் பாரியதொரு குறைபாடுகள் காணப்படுமாயின், அந்த அடித்தளத்தின் மேல் திட்டமிட்டுள்ள வீடாக இருந்தாலும் சரி, ஒரு கட்டடமாக இருந்தாலும் சரி, ஓர் உயர் நிறுவனமாக இருந்தாலும் சரி அதன் மேல் ஒரு செங்கல் கூட வைக்க முடியாது. ஆகவே, அடித்தளத்தை மீண்டும் மீண்டும் சீரமைக்க வேண்டும்.

“ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா” என்ற பழமொழிக்கிணங்க ஒரு கட்டடத்தினுடைய அடித்தளமானது ஒழுங்காக கட்டப்படாத இடத்தில் அதற்கு மேல் எந்த ஒரு கட்டுமாணப் பணியையும் எம்மால் ஈடுபடுத்த முடியாது. ஆகையால், ஒருவனது எதிர்காலத்துக்கு உந்து சக்தியாக காணப்படும் முதலாம் நிலைக் கல்வியினுடைய சிறப்பு இதிலிருந்து எமக்கு மெய்ப்படுகின்றது.

எனவே தான், வளர்முக நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வின்படி உயர்கல்வி, இடைநிலைக் கல்வி விளைவு வீதம் 15 வீதம் தொடக்கம் 17 வீதமாகவும் ஆரம்பக் கல்வியின் விளைவு வீதம் 27 வீதமாகவும் காணப்படுகின்றது. இதனால் பிற கல்வி நிலைகளை விட ஆரம்பக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

தனியாளும் சமூகமும் கல்வியால் அடைந்த நன்மைகளைத் தொகை ரீதியாக எடுத்துக் கூறுவது கல்வியின் விளைவு வீதமாகும். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கு இணங்க ஆரம்பக் கல்வியின் அத்திபாரம் முறையாகப் போடப்பட்டால் மாத்திரமே பிள்ளையினுடைய உறுதியான எதிர் காலத்துக்கு வழிவகுத்து விட முடியும். இதனை மனதில் கொண்டு பிள்ளையின் உடல் உள நிலைக்கு ஏற்றால் போல் ஆரம்பக் கல்வி வழங்கப்பட வேண்டும்.

**விதுர்சா மாணிக்கதேவன்,**
2ஆம் வருடம் முதலாம் அரையாண்டு,
கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி,
கல்வி, பிள்ளை நலத்துறை, கலைகலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.






# கிழக்கில் உள்ளூராட்சி ஊழியர்கள் நிரந்தர நியமனம் கோரிப் போராட்டம்!

**(ஏ.எஸ்.மௌலானா, அப்துல்சலாம் யாசீம், ஹஸ்பர்)**

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக அடிப்படையில் கடமையாற்றி வரும் ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி இன்று புதன்கிழமை (18) கிழக்கு மாகாண ஆளுநர் செயலகதத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 45 உள்ளூராட்சி மன்றங்களையும் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட தற்காலிக ஊழியர்கள் கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலகததுக்கு முன்பாக ஒன்றுகூடி, அங்கிருந்து ஆளுநர் செயலகம் வரை பேரணியாக சென்று அங்கு நீண்ட நேரம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இதில் கல்முனை, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று மாநகர சபைகளில் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர்.



# பொத்துவில் ஆஸ்பத்திரியில் புதிய கட்டடங்கள் அமைப்பு

**(எம்.ஏ.ஏ.அக்தர்)**



உலக வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பி.எஸ்.எஸ்.பி. செயற்றிட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் நிர்வாக கட்டடத் தொகுதியின் வேலைத் திட்டங்கள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

இந்த நிலையில் குறித்த கட்டடத்தின் வேலைத் திட்டங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம் றிபாஸ் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர்.

கள விஜயத்தின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஒப்பந்தக்காரரிடமும் சில விசேட ஆலோசனைகளை முன்வைத்த குழுவினர் அடுத்த வாரம் இக்கட்டடத் தொகுதியை திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டுக்குக் கையளிக்க உள்ளதால் வேலைத் திட்டங்களை விரைவுபடுத்துமாறும் கோரியுள்ளனர்.




# ‘அகரத்தின் சுவடிகள் - உன்னத கௌரவம்’ விருதுகள் வழங்கி ஆசிரியர்கள் கௌரவிப்பு

**(நூருல் ஹுதா உமர்)**

இறக்காமம் பிரதேச செயலகத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘அகரத்தின் சுவடிகள் – உன்னத கௌரவம்’ என்னும் தொனிப்பொருளில் உலக ஆசிரியர் தின நிகழ்வு செவ்வாய் கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம். இம்டாட் டின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், இறக்காமம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 22 பாலர் பாடசாலைகளில் கடமையாற்றும் 45 ஆசிரியர்களுக்கு அவர்களது அர்ப்பணிப்பான சேவைகளை கௌரவித்து ‘அகரத்தின் சுவடிகள் – உன்னத கௌரவம்’ விருதுகள் வழங்கப்பட்டன.

பெண்கள் மற்றும் சிறுவர்களின் நலன், பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் அவர்களது வளமான எதிர்காலத்துக்கான அர்பணிப்புடன் சேவையாற்றிய சிறுவர் அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். றஸ்ஸான் கலந்து கொண்டார். விஷேட அதிதியாக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.எம். தௌபீக், நிர்வாக உத்தியோகத்தர் எச்.பி. இந்திரசிறி பண்டார ஆகியோரும், சிறப்பு அதிதியாக மாவட்ட முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஆர்.எம்.ஏ.பி. சுரஞ்சி விஜேரட்னவும் கலந்து கொண்டனர்.




# உயர்தர மாணவர்கள் பாராட்டிக் கௌரவிப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை கல்வி வலயத்தில் பாடசாலை பரீட்சாத்தியாக 2022 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதி சகல பாடங்களிலும் அதி திறமைச் (3ஏ) சித்திகளை பெற்ற மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

‘றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எயிட்’ என்னும் சமூக அமைப்பின் ஏற்பாட்டில் அமைப்பின் தலைவர் எம்.றிஸ்லி முஸ்தபா தலைமையில் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய கேட்போர் கூட்டத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.





# சமுர்த்தி சங்க உறுப்பினருக்கு விழிப்புணர்வுச் செயலமர்வு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வொன்று சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (16) நடைபெற்றது.

இதன்போது இலவச சட்ட ஆலோசனை, போதை வஸ்துப் பாவனையின் விளைவுகள், நுகர்வோர் பாதுகாப்பு அடிப்படைச் சட்டம் பற்றி விளக்கமளிக்கப்பட்டன.

சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் எம்.ஐ.எம். சம்சுதீன் ஏற்பாட்டில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், கிழக்கு மாகாண நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஆணையாளர் எம்.பி.சபீர் அகமட் பிரதம அதிதியாக க் கலந்து கொண்டார்.

எம்.எம். பாத்திமா சமினா, சட்டத்தரணி என்.எம். ஆஸிக், சட்டத்தரணி வைத்தியர் யு.எல். சராப்தீன் ஆகியோர் நிகழ்வில் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது சமுர்த்தி தலைமைத்துவ முகாமையாளர் ஏ.எம்.நஜீம், சாய்ந்தமருது பிரதிச் செயலாளர் எம்.ஐ.மு. ஆபிகா உட்பட நிர்வாக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# கல்முனை பிராந்திய ஆஸ்பத்திரிகளது நடவடிக்கை சி.சி.ரி.வியில் கண்காணிப்பு

**(றியாஸ் ஆதம்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள 13 பிரதேச வைத்தியசாலைகளதும் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டு அந்த வைத்தியசாலைகளில் சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அது வலையமைப்பின் ஊடாக பிராந்திய பணிமனையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த வலையமைப்பை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை நேற்று (17) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எம்.முஜீபால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பி.அப்துல் வாஜித், பிரிவுத் தலைவர்கள், கணக்காளர் உள்ளிட்ட பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# போதைப்பொருளைக் கட்டுப்படுத்த நாவிதன்வெளியில் விழிப்புணர்வு!

**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

நாவிதன்வெளி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு வீதி நாடகம் நாவிதன்வெளி மத்திய முகாம் பிரதான வீதியில் பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி தலைமையில் நேற்று (17) நடைபெற்றது.

பிரதேச செயலகத்தின் சிறுவர் பெண்கள் பிரிவு மற்றும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி என்பன ஒன்றிணைந்து இந்த வீதி விழிப்புணர்வு நாடகத்தை நடத்தின.

இதில் போதைப்பொருள் பாவனையால் பெண்கள் சிறுவர்களுக்கு ஏற்படும் வன்முறைகள் மற்றும் அதனை தவிர்க்கும் வழிமுறைகள் தொடர்பாக விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டன.

இந்த வீதி நாடகம், தற்காலத்தில் வீட்டு சூழலில் நடைபெறும் போதைப் பாவனை, சிறுவர்கள் மீதான வன்முறை போன்றவற்றை தத்ரூபமாகச் சித்தரிக்கும் வகையில் அமைந்திருந்தது.

நிகழ்வில் பிரதேச செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. கிருபைராஜா திலகராணி, முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் திருமதி யு.எல் கபீலா, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எச். ரசாட், அம்பாறை மாவட்ட செயலகத்தின் அரச சார்பற்ற அமைப்புகளின் இணைப்பாளர் ஐ. எல்.எம்.இர்பான், மத்திய முகாம் பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவுப் பொறுப்பதிகாரி திருமதி குமாரிக்கா உட்பட கலாசார பிரிவு, சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# ஆசிரியைக்குப் பிரியாவிடை!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை கார்மல் பற்றிமா கல்லூரியில் கற்பித்து வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆங்கில ஆசிரியை திருமதி. ஜெயலினி தியாகராஜாவை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வு கல்லூரி அதிபர் அருட் சகோதரர் எஸ்.ஈ.றெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# கிளிநொச்சி பண்பாட்டுப் பெருவிழா முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல்



(அ.அஸ்வர்)

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா தொடர்பான முன்னேற்பாட்டு கலந்துரையாடல் நேற்று (17) செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரும், மாவட்ட கலாசாரப் பேரவையின் தலைவருமான ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இவ்வாண்டுக்கான கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடலில் மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா தொடர்பான முன்னேற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

விழா அரங்கத்துக்கான பெயர், விழாவுக்கான விருந்துனர்கள், விழாவுக்கான குழுக்கள் மற்றும் குழுக்களுக்கான பொறுப்புக்கள், நிகழ்ச்சி நிரல் ஒழுங்க மைப்பு, நிதித் தேவைகள், விழா முன்னேற்பாடுகள், கலைஞர் கௌரவிப்பு ஏற்பாடுகள், கலைநிகழ்வுகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபரகள், மாவட்டச் செயலக உயரதிகாரிகள், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைப்பாளர், வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக கலாசார பிரிவின் உத்தியோகத்தர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக கலாசார பேரவையின் அங்கத்தவர்கள், கலைஞர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனையில் வறுமை ஒழிப்பு வாரம்!

(எம். எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டுப் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சமுர்த்தி வங்கி மேம்பாட்டு நடவடிக்கை, போசணை மேம்பாட்டு வேலைத்திட்டம், திறன் மற்றும் பயிற்சி வேலைத்திட்டம், புகைத்தல், மது ஒழிப்பு வேலைத்திட்டம், மகிழ்ச்சியான குடும்ப அபிவிருத்தி வேலைத்திட்டம், முயற்சியாண்மை மற்றும் வாழ்வாதார வலைத்திட்டம், வீட்டு வேலைத்திட்டம், சிரமதான வேலைத்திட்டம், சந்தைப்படுத்தல் வேலைத்திட்டம், சுற்றாடல் வேலைத்திட்டம், காடுவளர்ப்பு வேலைத்திட்டம், சிறுவர் கழக புனரமைப்பு வேலைத்திட்டம் என்பன இடம்பெறவுள்ளன.

அதன் முதற்கட்டமாக இன்று (18) வாராந்த சந்தையும் மர நடுகை நிகழ்வும் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபீர் தலைமையில் இடம் பெற்றன.

நிகழ்வில் அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முசாபீர், தலைமைப்பீட முகாமையாளர் ஏ. எம். ஹமீத், கருத்திட்ட முகாமையாளர் எஸ். எல்.அசீஸ், தி.பரமானந்தம், ஐ யூ. நபீஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வைச் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மற்றும் சமுர்த்தி பிரிவு இணைந்து நடத்தின.





# காசா மருத்துவமனை மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 500 பேர் உயிரிழப்பு








காசா நகரத்தில் உள்ள மருத்துவமனை மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 500 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என காசா சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலை தாங்கள் மேற்கொள்ளவில்லை என்று இஸ்ரேல் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

கடந்த 7 ஆம் திகதி தொடங்கிய காசா – இஸ்ரேல் மோதல், தற்போது 12 ஆவது நாளை எட்டியுள்ளது. இந்த நிலையில், காசாவில் உள்ள மருத்துவமனை மீது நடந்த தாக்குதலில் குறைந்தது 500 பேர் உயிரிழந்துள்ளனர் என காசா சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

இந்த வான் தாக்குதலுக்கு இஸ்ரேல் தான் காரணம் என காசா குற்றம் சாட்டியுள்ளது. இஸ்ரேல் இதனை திட்டவட்டமாக மறுத்துள்ளது. இஸ்லாமிய ஜிகாத் அமைப்பே இதற்குக் காரணம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குற்றம் சாட்டியுள்ளார்.

இஸ்ரேலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், இந்த தாக் குதல் காசா பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு அரபு நாடுகளும், ஐ.நாவும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல் – காசா இடையே உடனடியாக போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அரபு நாடுகளும், ஐ.நாவும் வலியுறுத் தியுள்ளன.

ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டனியோ குட்டரஸ் வெளியிட்டுள்ள சமூக வலைத்தள பதிவில், காசாவில் உள்ள மருத்துவமனை மீதான தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்த செய்தி மிகுந்த வேதனையை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறேன். பாதிக்கப்பட்ட மக் களின் குடும்பங்களுக்கு ஆறுதலை தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்வதேச மனிதாபிமான சட்டப்படி மருத்துவமனைகளும், மருத்துவ பணியாளர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவமனை மீதான தாக்குதலை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மறுத்துள்ள நிலையில், அவர் பொய் சொல்கிறார் என்று ஐ.நாவுக்கான பாலஸ்தீன தூதுவர் ரியாத் மன்சூர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் பாலஸ்தீன தூதுவர் கருத்து தெரிவிக்கையில், அவர் ஒரு பொய்யர். மருத்துவமனையை சுற்றி ஹமாஸ் அமைப்பின் செயல்பாடு இருக்கிறது என கருதி இஸ்ரேல் இந்த தாக்குதலை நிகழ்த்தியதாக இஸ்ரேல் டிஜிட்டல் செய்தித் தொடர்பாளர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்டிருந்தார். தற்போது அவர் தனது பதிவை நீக்கிவிட்டார். ஆனாலும், அதன் நகல் எங்களிடம் உள்ளது.

இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல்தான் காரணம். பொய் கதைகளை அவர்கள் புனைவதை ஏற்க முடியாது என தெரிவித்துள்ளார்.

நேற்றைய நிலவரப்படி இஸ்ரேலின் தாக்குதலில் காசாவைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேல் தரப்பில் ஆயிரத்து 300 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 200 பேர் பணயக் கைதிகளாக ஹமாஸ் அமைப்பால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

# அமெரிக்க ஜனாதிபதி இஸ்ரேல் சென்றடைந்தார்: பைடனின் அரபு நாடுகளுக்கான விஜயம் இரத்து!



இஸ்ரேல் – ஹமாஸ் மோதல் தீவிரமடைந்து வருகிறது. இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேலை சென்றடைந்துள்ளார்.

இஸ்ரேல் – அமெரிக்க ஒற்றுமையை நிலைநிறுத்தவும், போர் திட்டங்கள் தொடர்பில் விவாதிக்கவும் பைடனின் இந்த விஜயம் காணப்படுகிறது என அமெரிக்க அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கசாவின் வைத்தியசாலையில் இடம்பெற்ற பாரிய குண்டுத் தாக்குதலில் பலர் பலியான நிலையில், பைடனின் அரபு நாடுகளுக்கான விஜயம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு இரு தரப்பும் பொறுப்புக்கூற மறுக்கும் நிலையில் பாலஸ்தீனிய அதிகாரிகளும் இஸ்ரேலிய இராணுவமும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக்கொண்ட விடயமானது சர்வதேச மட்டத்தில் பெரும் பதற்றத்தை தோற்றுவித்துள்ளது.

இந்த நிலையில் இன்று இஸ்ரேலை சென்றடைந்த பைடனை இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு வடவேற்றுள்ளார்.

ஜோ பைடன் இஸ்ரேலிய அமைச்சரவையை சந்திப்பதற்கு முன்பு போர் தொடர்பான மிக சிறிய மட்டுப்படுத்தப்பட்ட இருதரப்பு சந்திப்பொன்று நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இஸ்ரேலின் போர் நோக்கங்களை நன்கு புரிந்துகொள்வதற்கான விடயங்களாக பைடனின் சந்திப்பு அமையப்பெறும் என அமெரிக்க தேசிய பாதுகாப்பு அமைச்சின் செய்தி தொடர்பாளர் ஜோன் கிர்பி கருத்து தெரிவித்திருந்தார்.

ஜோ பைடன் சில கடினமான கேள்விகளைக் கேட்பார். ஆனால் அவர் இஸ்ரேலிடம் அவற்றை ஒரு நண்பராகக் கேட்பார் என்று செய்தியாளர்களிடம் மேலும் கூறியிருந்தார்.

மனிதாபிமான உதவிகள் அனைத்தும் காசாவுக்குள் கொண்டு செல்வதை உறுதி செய்யவே அமெரிக்கா முயற்சித்து வருகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

காசா மீது இஸ்ரேல் தாக்குதல்களை நடத்துவதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவுகளை வழங்கி வருகிறது.

# காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் உடனடியாக சென்றடைய வேண்டும்!

## – உலக சுகாதார அமைப்பு வேண்டுகோள்

காசாவுக்கான உணவு, மின்சாரம், குடிநீர் என அனைத்தையும் இஸ்ரேல் நிறுத்தியுள்ளது.

இதனால், காசா மக்கள் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றனர். உணவு, குடிநீர் கிடைக்காமல் திணறி வருகின்றனர்.

இஸ்ரேலின் தாக்குதல் தீவிரமடைந்து வருகிற நிலையில், காசாமக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை கொண்டு சேர்ப்பது சர்வதேச மனிதாபிமான அமைப்புகளுக்கு சவாலாக உள்ளது.

இந்தச் சூழலில் காசா மக்களுக்கு அடிப்படை உதவி வழங்குவதற்கான வாய்ப்புகள் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் கிழக்கு மத்திய தரைக்கடல் பிராந்திய இயக்குநர் டாக்டர் ரிச்சர்ட் பிரென்னன் கூறுகையில்,



காசாவில் நிலைமை மிகவும் மோசமடைந்து வருகிறது. மக்கள்மருத்துவ வசதி, உணவு, குடிநீர் இல்லா மல் திணறி வருகின்றனர். அவர்களுக்கு உடனடியாக உதவிவழங்கப்பட வேண்டும். மனிதாபிமான உதவிகள் காசா மக்களை அடைவதற்கான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். இது குறித்து நாங்கள் உலக நாடுகளின் தலை வர்களிடம் பேசி வருகிறோம் என்று தெரிவித்தார்.

இதேவேளை, ஐ.நா. சபையின் பாலஸ்தீன அகதிகள் அமைப்பின் தலைவர் பிலிப் கருத்து தெரிவிக்கையில்,

இஸ்ரேல் ராணுவ தாக்குதல்களால் உயிரிழப்பு அதிகரித்து வருகிறது. மருத்துவமனை சவக்கிடங்குகளில் உடல்களை வைக்கஇடமில்லை. எனவே குழந்தைகளின் உடல்களை ஐஸ்கிரீம் வான்களில் உள்ள குளிர்சாதன பெட்டிகளில் வைத்து வருகிறோம். உடல்களை வைப்பதற்கான சிறப்பு பைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

காசா பகுதி மருத்துவமனைகளில் ஜெனரேட்டர் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து வருகிறோம். எரிபொருள் இருப்புதீர்ந்து வருவதால் மருத்துவமனைகள் முடங்கும் நிலை உருவாகி இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# தமிழக மீனவர்கள் ஒன்பது பேர் மீது இலங்கை கடற்கொள்ளையர் தாக்குதல்



தமிழக மீனவர்கள் 9 பேர் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நாகப்பட்டினம் மீனவர்கள் சிலர் கோடியக்கரை அருகே கடலில் மீன்பிடித்து கொண்டிருந்துள்ளனர்.

இந்த நிலையில் திடீரென இலங்கை கடற்கொள்ளையர்கள் சிலர் அவர்களை சுற்றிவளைத்து தாக்க ஆரம்பித்துள்ளனர். இந்த எதிர்பாராத தாக்குதலில் 9 மீனவர்கள் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், மீனவர்களிடம் இருந்த 5 லட்சம் ரூபா மதிப்புள்ள 700 கிலோ மீன்பிடி வலைகள், ஜி.பி.எஸ். கருவிகள் ஆகியவற்றை கொள்ளையர்கள் எடுத்துள்ளனர். மேலும் அவர்களிடம் இருந்த தங்க சங்கிலிகளையும் பறித்து கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அத்துடன், இலங்கை கடற்கொள்ளையர்கள் தங்களை சித்திரவதை செய்தனர் என நாகை மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

காயமடைந்த 9 மீனவர்களும் நாகை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் குறித்து கடலோரக் காவல்படை பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

இலங்கை கடற்கொள்ளையர்களால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

இதற்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று மீனவர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிவகாசி பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம்



விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே பட்டாசு விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை வாங்க மறுத்து உறவினர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள ரெங்கபாளையத்தில் பட்டாசு கடை ஒன்றில் வெடிவிபத்து ஏற்பட்டு 13 பேர் நேற்று உயிரிழந்தனர். உயிரிழந்தோர் சடலங்கள் பிரேதப் பரிசோதனைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

உடல்கள் அனைத்தும் கருகி இருந்ததால் அடையாளம் காணமுடியாமல் உறவினர்களும் குடும்பத்தினரும் தவித்தனர். உயிரிழந்தூர் குடும்பத்தினரை சந்தித்து நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் ஆறுதல் கூறினார்.

அதையடுத்து, விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் அனைத்தும் விருதுநகர் அரசு மருத்துவமனையில் 6 பேர் கொண்ட மருத்துவக் குழுவினரால் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

முதல் கட்டமாக அடையாளம் காணப்பட்ட ஐந்து பேரின் சடலங்கள் பிரேத பரிசோதனை செய்து முடிக்கப்பட்டன.

ஆனால் அவர்களது உடல்களை பொறுப்பேற்பதற்கு குடும்பத்தினரும் உறவினர்களும் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களுக்கு பட்டாசு கடை நிர்வாகம் சார்பில் தலா 5.50 லட்சம் ரூபா வழங்கப்படும் எனவும் அரசு வழங்கும் நிதி உதவி 3 லட்சம் ரூபா பெற்று கொடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால் உயிரிழந்தோர் குடும்பத்துக்கு தலா 25 லட்சம் ரூபா வழங்க வேண்டும் என்றும் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என்றும் இலவச வீட்டு மனை பத்திரம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து உடல்களை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

பொலிஸ் பாதுகாப்புடன் பாக்கியலட்சுமி என்பவரின் சடலம் அவரது சொந்த ஊருக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஆனால் உயிரிழந்த ஏனையவர்களின் சடலங்களை வாங்க மறுத்து உறவினர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அசம்பாவிதங்களை தடுக்கும் வகையில் விருதுநகர் அரசு மருத்துவ மனையில் 200 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடு படுத்தப்பட்டுள்ளனர்.




# இலங்கைக் கடற்படையைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம்

## கைதான தமிழக மீனவர்களை விடுதலை செய்யுமாறு கோஷம்

இலங்கைக் கடற்படையால் சிறைப் பிடிக்கப்பட்ட 27 மீனவர்களையும் ஐந்து விசைப் படகுகளையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இராமேஸ்வரம் தபால் தந்தி அலுவலகம் முன்பு இன்று காலை பாதிக்கப்பட்ட மீனவர்களும், மீனவ சங்க அமைப்பின ரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட வர்கள், “கச்சத்தீவை மீட்டு கொடு”, “கச்சத்தீவுப் பகுதியில் இழந்த மீன்பிடி உரிமையை மீட்டெடுக்கவும்”, “இலங் கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்”, “இலங்கைக் கடற்படையால் தாக்குதலுக்குள்ளான படகுகளுக்கு முழு நிவாரணம் வழங்க வேண்டும்”, “இலங்கைக் கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட விசைப் படகளுக்கு முழுமையான நிவாரணம் வழங்க மத்திய, மாநில அரசுகள் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்” – என்று கோஷங்களை எழுப்பி னார்கள்.







